ஆன்மிக சிகரத்தின்
# நம்ம ஊரு நியூஸ்
RNI No: TNTAM/2017/75122
Editor: V.S.N.Sharma | Chief Reporter : S.Esakki | Chennai : 9710755689 | 9962505384 | 6 பக்கம் | 7.3.2026 சனிக்கிழமை







## எல்பிஜி இருப்பைப் பொறுத்தவரை, இந்தியா வலுவான நிலையில் உள்ளது

# பெட்ரோல், டீசல், எல்பிஜி விநியோகத்தில் பாதிப்பு ஏற்படாது

புதுடெல்லி, மார்ச் 7: பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விநியோகத்தில் எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும், எரிபொருள் போதுமான அளவு கிடைப்பதை உறுதிப்படுத்த உற்பத்தியை அதிகரிக்குமாறு அனைத்து சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் உத்தரவிடப்பட்டு உள்ளதாகவும் மத்திய அரசு வட்டாரங்கள் உறுதிபட தெரிவித்துள்ளன.

ஈரானுக்கு எதிராக இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து கடந்த பிப்.28-ம் தேதி தாக்குதலைத் தொடங்கின. ஈரானும் பதிலடி கொடுத்து வருகிறது. இந்தப் போர் தீவிரமடைந்து வருவதாலும், வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் வரத்துப் பாதையான ஹார்முஸ் ஜலசந்தி முடக்கப் பட்டிருப்பதாக செய்திகள் வருவதாலும் உள்நாட்டில் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கான சாத்தியங்கள் குறித்து செய்திகள் வெளியாகின.

மேலும், மங்களூரு சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட உள்ளதாகவும் செய்திகள் வெளியாகின. இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக அரசு வட்டாரங்கள் கூறியது: ஹார்முஸ் ஜலசந்தி பாதையில் ஏற்படும் இடையூறுகள் குறித்த கவலை உள்ள போதிலும், கச்சா எண்ணெய், பெட்ரோலியப் பொருட்கள், எல்பிஜி விநியோகம் ஆகியவற்றில் இந்தியா மிகவும் 'வலுவான' நிலையில் உள்ளது.

ஹார்முஸ் ஜலசந்தி பாதை மூலம் மேற்கொள்ளப்படும் இறக்குமதியைவிட பன்முகப்படுத்தப்பட்ட ஆதாரங்கள் மூலம் அதிக கச்சா எண்ணெயை இந்தியா இறக்குமதி செய்கிறது. இந்தியாவின் தற்போதைய கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்களின் இருப்பு உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்ய போதுமானது.

அரசாங்கம் நிலைமையை உன்னிப்பாகக் கண்

2ம் பக்கம் பார்க்க...









# ஈரான் போர்க்கப்பலுக்கு இந்தியா அடைக்கலம்

கொச்சி, மார்ச் 7: மத்திய கிழக்கில் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான போர் தீவிரமடைந்துள்ள நிலையில், மனிதாபிமான அடிப்படையில் ஈரான் போர்க்கப்பல் ஒன்றுக்கு இந்தியா புகலிடம் அளித்துள்ளது.

இலங்கை அருகே ஈரானின் 'ஐஆர்ஐஎஸ் தேனா' போர்க்கப்பல் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலால் தகர்க்கப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன்பாகவே, மற்றொரு ஈரான் போர்க்கப்பலான 'ஐஆர்ஐஎஸ் லாவன்' கொச்சி துறைமுகத்திற்கு வந்தடைந்தது.

சர்வதேசக் கடற்படை அணிவகுப்பில் பங்கேற்பதற்காக இப்பகுதிக்கு வந்திருந்த இந்தக் கப்பலில் திடீர் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதால், பிப்ரவரி 28 அன்று ஈரான் தரப்பிலிருந்து அவசரக் கோரிக்கை விடுக்கப் பட்டது. இந்திய அரசு இதற்கு ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, மார்ச் 4 அன்று அந்தக் கப்பல் கொச்சியில் நிலை நிறுத்தப்பட்டது.

தற்போது 'ஐஆர்ஐஎஸ் லாவன்' கப்பலில் இருந்த 183 ஈரான் கடற்படை வீரர்கள் கொச்சியில் உள்ள இந்தியக் கடற்படை முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 1985-ல் கமிஷன் செய்யப்பட்ட இந்தக் கப்பல், தரை மற்றும் நீர் ஆகிய இரு நிலைகளிலும் போரிடக்கூடிய கனரகக் கப்பலாகும். இதேபோல், இலங்கையும் 'ஐஆர்ஐஎன்எஸ் புஷெர்' என்ற ஈரான் கப்பலுக்குத் திருகோணமலைத் துறைமுகத்தில் அனுமதி அளித்து, அதில் இருந்த 208 வீரர்களைப் பாதுகாப்பாக வெளியேற்றியுள்ளது. ஈரானின் வான் பாது காப்பு மற்றும் கடற்படை முற்றிலும் முடக்கப்பட் டுள்ளதாக அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ள சூழலில், இந்தியாவின் இந்த மனிதாபிமான நடவடிக்கை சர்வதேச அளவில் கவனம் ஈர்த்துள்ளது




# முதல்வர் ஸ்டாலின் பிறந்தநாள் கொண்டாட்டம்



சிவகாசியில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் 73 வது பிறந்தநாளை முன்னிட்டு சிவகாசி சாட்சியாபுரம் அருகே உள்ள சி எஸ் ஐ பள்ளியில் பயிலும் செவித்திறன் குறைவுடைய மாணவ மாணவிகளுக்கு இரவு உணவும், 200 பேர்களுக்கு கல்வி உபகரண பொருட்களையும் சிவகாசி முன்னாள் நகர் மன்ற சேர்மனும், திமுக 6ம் பகுதி கழகச் செயலாளரும், மாமன்ற உறுப்பினருமான ஞானசேகரன் வழங்கினார்.

## திருச்செந்தூரில் புத்தகத் திருவிழா 2026

# மாணவ மாணவிகளுக்கு ஓவியப்போட்டி, திருக்குறள் மற்றும் கட்டுரை போட்டிகள் நடைபெறும்

திருச்செந்தூர், மார்ச் 7: தமிழ்நாடு புத்தக விற்பனையாளர்கள் சங்கம், தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பு வாசிப்பு இயக்கம், தூத்துக்குடி மாவட்டம் மற்றும் ஜெ.சி.ஐ. திருச்செந்தூர் இணைந்து நடத்தும் முதலாம் ஆண்டு திருச்செந்தூர் புத்தகத் திருவிழா 2026 சொர்ணம் மஹாலில் நடைபெறுகிறது.

### ஓவியப்போட்டி

புத்தக கண்காட்சியில் நடைபெறும் போட்டிகளின் விவரம் வருமாறு:

ஓவியப்போட்டியின் தலைப்பு நான் விரும்பும ஓவியம் என்னும் தலைப்பில் எல்.கே.ஜி.முதல் 12ம் வகுப்பு வரை உள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

### கட்டுரை போட்டி

புத்தகம் என்ன செய்யும்? என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டியும் நடைபெறுகிறது. இப்போட்டியில் 5வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையிலான குழந்தைகள் கலந்து கொள்ளலாம்.

### திருக்குறள் போட்டி

5 முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவ - மாணவிகள் திருக்குறள் எழுதும் போட்டி என்னும் தலைப்பில் திருக்குறள் போட்டியும் நடைபெறுகிறது.

மேலும், ஓவியங்கள் மற்றும் கட்டுரைகள் அனுப்பியவர்களில் தேர்வு செய்யப்படும் மாணாக்கர்கள் மார்ச் 22 ஆம் தேதி மாலை 5 மணிக்கு புத்தகக் கண்காட்சி நடைபெறும் இடத்திற்கு நேரில் வந்து, அதே ஓவியத்தை மீண்டும் வரைய வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஓவியங்கள் மற்றும் கட்டுரைகளுக்கு பரிசுகள் வழங்கப்படும், மேலும் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பரிசு விநியோகம் மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா மார்ச் 25 ஆம் தேதிமாலை 5மணிக்கு புத்தகக் கண்காட்சி வளாகத்தில் நடைபெறும். தாங்கள் வரையும் ஓவியங்கள் மற்றும் கட்டுரைகள் அனைத்தையும் 88703 76637 என்ற வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்.

# பெட்ரோல், டீசல், எல்பிஜி விநியோகத்தில்...

1ம் பக்க தொடர்ச்சி

காணித்து வருகிறது. ஹார்முஸ் ஜலசந்தி பாதையில் தடை ஏற்படுமானால் அதை ஈடு செய்ய மாற்று வழிகள் மூலம் விநியோகத்தை அதிகரிக்க திட்டமிடப் பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக இந்தியா தனது கச்சா எண்ணெய் இறக்குமதியை கணிசமாக பன்முகப்படுத்தியுள்ளது. 2022-ல் இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவையில் 0.2% மட்டுமே ரஷ்யாவிடம் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. அதேநேரத்தில், அடுத்தடுத்த ஆண்டுகளில் இது 20% அளவுக்கு உயர்ந்தது. அதாவது ஒரு நாளைக்கு சுமார் 1.04 மில்லியன் பீப்பாய்கள். மங்களூரு சுத்தகரிப்பு மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட் (MRPL) சுத்திகரிப்பு நிலையம் மூடப்படும் என்ற தகவல் தவறானது. MRPL சுத்திகரிப்பு நிலையம் முழுமையாக செயல்பட்டு வருகிறது.

போதுமான அளவு கச்சா எண்ணெய் கையிருப்பில் உள்ளது.

எல்பிஜி போதுமான அளவு கிடைப்பதை உறுதிப்படுத்த உற்பத்தியை அதிகரிக்குமாறு அனைத்து எல்பிஜி சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

எல்பிஜி இருப்பைப் பொறுத்தவரை, இந்தியா தற்போது ஒரு வலுவான நிலையில் உள்ளது. கடந்த ஜனவரியில் இருந்து அமெரிக்காவிடம் இருந்தும் எல்பிஜி வரத் தொடங்கியுள்ளது என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதர்மத்தை அகற்றிட! ஒன்றுபடுவோம்!! வென்றுவருவோம்!!!
ஸ்ரீ பைரவ சேனைகள் அறக்கட்டளை
கோவிலம்பாக்கம், சென்னை - 600 129.
கௌரவத் தலைவர்கள்
T.நடராஜன் K.முருகேசன் A.V.செந்தில் ராஜன் M.நாராயணன் A.சக்திவேல்
தலைவர் P.ராமகிருஷ்ணன் 9444317157
செயலாளர் T.ரவிசந்திரன் 9940536827
பொருளாளர் S.அருண்குமார் 9994641239
துணை தலைவர் நாஞ்சில் C.மனோகரன்
துணை செயலாளர் T.சுயம்புலிங்கம்
துணை செயலாளர் R.V.கணேசன்
ஆலோசகர்கள் துலசை A.சிதம்பரம் காமதேனு G.சுந்தர் சிங்
மக்கள் தொடர்பு தசரா நாயகி M.ஆனந்த், இசக்கி சுடலை
இளைஞர் அணி ஒருங்கிணைப்பாளர்கள் T.ஏழுமலை



# தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சிறப்பாக உள்ளது தூத்துக்குடியில் செல்வப்பெருந்தகை பேட்டி

தூத்துக்குடி, மார்ச் 7: தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கை அரசு சிறப்பாகக் கட்டுப்படுத்தி வைத்துள்ளது. பெண்கள் வாழ்வதற்கு உகந்த மாநிலம் தமிழ்நாடு என்று மத்திய அரசே சான்றிதழ் வழங்கியுள்ளது என்று காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை கூறினார்.

தமிழக காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை இன்று தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: அதிமுக - பாஜக கூட்டணி என்பது இயற்கைக்கு மாறானது என நாங்கள் ஆரம்பம் முதலே கூறி வருகிறோம். மக்களால் நிராகரிக்கப்பட்ட இந்தக் கூட்டணி ஒரு 'மூழ்கும் கப்பல்'. அதில் தெரியாமல் ஏறியுள்ள சிலரும் இப்போது இறங்குவதற்கு வாய்ப்புள்ளது.

திமுக தலைமையிலான 'இந்தியா' கூட்டணி வலிமையானது; இது தமிழக மக்களைத் தலைநிமிரச் செய்யும் கூட்டணி. ஆனால், என்.டி.ஏ கூட்டணி என்பது தமிழக மக்களைத் தலைகுனிய வைக்கும் கூட்டணியாகும். தமிழக உரிமைகளை மோடியும், அமித்ஷாவும் எப்போதெல்லாம் பறிக்க நினைக்கிறார்களோ, அங்கெல்லாம் கையொப்பமிட்டுத் தமிழகத்தைத் தலைகுனிய வைத்தவர்கள் அதிமுகவினர். தேர்தலுக்குப் பிறகு அதிமுக என்ற கட்சி இருக்குமா அல்லது அந்தக் கட்சியை பாஜக விழுங்குமா என்பதுதான் இப்போதுள்ள பெரிய கேள்வி.

பீகாரில் நிதிஷ் குமாரைப் பதவியிலிருந்து இறக்கிவிட்டு, அவரை மாநிலங்களவைக்கு அனுப்ப பாஜக திட்டமிட்டுள்ளது. அங்கு பாஜகவைச் சேர்ந்த ஒருவரை முதலமைச்சராக்க முயற்சி நடக்கிறது. அதேபோன்று, தமிழகத்தில் அதிமுகவைக் கபளீகரம் செய்வதற்கான திட்டத்தை மோடியும், அமித்ஷாவும் வகுத்துள்ளனர். இதில் ஏமாந்து போன அதிமுக, எதற்காகத் தன் உரிமைகளைத் தாரை வார்க்கிறது என்று தெரியவில்லை.

டெல்லியில் உள்ள மத்திய அரசிடம் எல்லாவற்றையும் அடகு வைத்துவிட்டு, 'தப்பித்தால் போதும்' என்ற நோக்கில் அதிமுக அரசியல் செய்கிறது. 1996 தேர்தல் முடிவுகள் எப்படி இருந்ததோ, அதேபோன்ற ஒரு முடிவைத் தான் மக்கள் இந்தத் தேர்தலிலும் வழங்குவார்கள்.

காங்கிரஸ் கட்சியில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்து இருக்கலாம். ஆனால், அகில இந்தியத் தலைமையின் முடிவே இறுதியானது. தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோரின் வழிகாட்டுதலில் நாங்கள் எவ்விதக் குழப்பமுமின்றி இணக்கமாகச் செயல்பட்டு வருகிறோம். தேர்தல் தொகுதிகள் மற்றும் பிரச்சாரப் பயணங்கள் குறித்துத் தற்போது ஆலோசித்து வருகிறோம்.

வன்முறை மற்றும் ஜாதிய வன்கொடுமைகள் எங்கு நடந்தாலும் அவை கண்டிக்கத்தக்கவை. அதிமுக ஆட்சியில் நடந்தவற்றை ஒப்பிடாமல், இப்போது நடப்பவற்றை மட்டும் விமர்சிப்பது நியாயமல்ல. பாஜக ஆளும் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் தலித் மக்களுக்கு எதிராக நடக்கும் கொடுமைகளை அதிமுக கவனிக்க வேண்டும்.

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கை அரசு சிறப்பாகக் கட்டுப்படுத்தி வைத்துள்ளது. பெண்கள் வாழ்வதற்கு உகந்த மாநிலம் தமிழ்நாடு என்று மத்திய அரசே சான்றிதழ் வழங்கியுள்ளது. ஜாதிய மோதல்களைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எங்களின் கோரிக்கை என்றார். பின்னர் அவர் நாங்குநேரி வன்முறை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களை சந்திப்பதற்காக காரில் புறப்பட்டுச் சென்றார்.




## துணை முதல்வர் உதயநிதி இன்று தூத்துக்குடி வருகை:

# ரூ.300 கோடி மதிப்பில் திட்டங்கள் தொடக்கம்!

தூத்துக்குடி, மார்ச் 7: தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இன்று (மார்ச் 7, சனிக்கிழமை) தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு அரசு நலத்திட்டத் தொடக்க விழாக்களில் பங்கேற்க உள்ளதாக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது: திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தனது சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நாளை காலை தூத்துக்குடி வருகை தருகிறார்.

காலை 9.30 மணி அளவில், தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ரூ.136 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அதிநவீன உயர்தர சிறப்பு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவைத் திறந்து வைத்து, அங்குள்ள வசதிகளைப் பார்வையிடுகிறார்.

அதனைத் தொடர்ந்து, தூத்துக்குடி தருவை மைதானத்தில் நடைபெறும் பிரம்மாண்ட அரசு விழாவில் கலந்து கொள்கிறார். அங்கு சுமார் ரூ.100 கோடி மதிப்பிலான முடிவுற்ற பல்வேறு திட்டப் பணிகளைத் தொடங்கி வைக்கிறார். புதிய திட்டப் பணிகளுக்குக் காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டுகிறார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள், கலைஞர் கனவு இல்லம் திட்டப் பயன்கள், வீட்டு மனைப் பட்டாக்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினருக்குக் கடனுதவி உள்ளிட்ட அரசு நலத்திட்ட உதவிகளைப் பயனாளிகளுக்கு வழங்குகிறார்.

தொடர்ந்து, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ரூ.64.17 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 528 அடுக்குமாடி குடியிருப்புகளை அவர் திறந்து வைக்கிறார். முற்பகல் 11.30 மணி அளவில், புதுக்கோட்டை சத்யா ரிசார்ட்டில் தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக சார்பில் நடைபெறும் நிகழ்வில் பங்கேற்கிறார். அங்கு மாவட்டத்திற்குட்பட்ட திமுகவின் பல்வேறு சார்பு அணி நிர்வாகிகளுடன் கலந்துரையாடுகிறார். நிகழ்ச்சிகள் அனைத்தையும் முடித்துக்கொண்டு, பிற்பகல் 1.30 மணி அளவில் தூத்துக்குடி விமான நிலையத்திலிருந்து விமானம் மூலம் சென்னை புறப்பட்டுச் செல்கிறார்.

## தாட்கோ மூலம் கேட்டரிங் டெக்னாலஜி பயிற்சி:

# மாணாக்கர்களுக்கு ஆட்சியர் அழைப்பு

தூத்துக்குடி, மார்ச் 7: 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு ஹோட்டல் மேனேஜ்மெண்ட் கேட்டரிங் டெக்னாலஜி இன்ஸ்டிட்யூட்டியில் இளங்கலை அறிவியல் பட்டப்படிப்பில் சேர்ந்து படித்திட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.



இதுகுறித்து தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க. இளம்பகவத் வெளியிட்ட செய்திக்குறிப்பில், "தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பாக பனிரெண்டாம் வகுப்பு முடித்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவருக்கு தேசிய தேர்வு முகமை (NTA) சார்பில் தேசிய ஹோட்டல் மேலாண்மை கவுன்சில் இணை நுழைவுத்தேர்வு (NCHM JEE-2026) மூலமாக B.Sc (Hospitality & Hotel Administration) ஹோட்டல் மேனேஜ்மென்ட் கேட்டரிங் டெக்னாலஜி இன்ஸ்டிட்யூட்டியில்கொ மூன்று வருட முழுநேர பட்டப்படிப்பில் சேர்ந்து பயில விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகிறது.

சென்னை தரமணியிலுள்ள Institute of Hotel Management Catering Technology & Applied Nutrition என்ற நிறுவனமானது ISO 9001 2015 தரச்சான்றுச்டிடு பெற்ற நிறுவனமாகும். இந்நிறுவனமானது ஒன்றிய அரசின் சுற்றுலா துறையின் கீழ், அமையப்பெற்ற ஒரு தன்னாட்சி நிறுவனம், மேலும் இந்நிறுவனம் சர்வதேசடெஆAmercian Council of Business அங்கீகரிக்கப்பட்டுள்ளது மற்றும் பிரான்ஸ் நாட்டில் உள்ளள்Lycee Nicolas Appert Catering நிறுவனத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. Hotel Management Institute Survey 2022-ன்படி உலகளாவிய மனித வள மேம்பாட்டு மையத்தில் இரண்டாவதாக இடம் பெற்றுள்ளது.ஏCEO WORLD MAGAZINE நடத்திய உலகளவில் சிறந்த விருந்தோம்பல் மற்றும் ஹோட்டல் மேலாண்மை பள்ளிகளில் உலகதர வரிசையில் பதி மூன்றாவது இடத்தில் இந்நிறுவனம் இடம் பெற்றுள்ளது.

மேற்கண்ட நிறுவனத்தில் பயில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவராகவும், பனிரெண்டாம்வகுப்பில் 45 சதவீதம் தேர்ச்சி பெற்றுயிருக்கவேண்டும். குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.3.00 லட்சத்திற்குள் இருக்கவேண்டும், தேசிய தேர்வு முகமை (NTA) சார்பில் தேசிய ஹோட்டல் மேலாண்மை கவுன்சில் இணை நுழைவுத்தேர்வு (NCHM JEE-2026)-க்கு விண்ணப்பிக்க கடைசிதேதி 25.03.2026

இத்தேர்வானது 25.04.2026 அன்று இணைய தளம் வழியாக நடைபெறும் இத்தேர்வினை பற்றிய மேலும் விவரங்கள் மற்றும் பதிவு செய்யhttp://exams.nta.nic.in/nchm-jee/ என்ற இணையதளத்தினை தொடர்பு கொள்ளலாம். இப்படிப்பிற்கான செல வீனம் தாட்கோவால் ஏற்கப் படும். மேலும் இப்படிப் பினை தாட்கோ மூலமாக பயில www.tahdco.com என்ற இணையதள முகவரியில் பதிவு செய்ய வேண்டும்.

இப்படிப்புகளை வெற்றிகரமாக முடிக்கும் பட்சத்தில் தங்களது திறமையின் அடிப்படையில் நட்சத்திர விடுதிகள், உயர்தர உணவகங்கள் விமானத்துறை, கப்பல்துறை மற்றும் சேவை துறைசார்ந்த நிறுவனங்களில் பணிபுரிய வழிவகை செய்யப்படும்.ஆரம்பகால மாத ஊதிய மாக ரூ.25,000/- முதல் ரூ.35,000/- வரை பெறலாம். பின்னர் திறமைக் கேற்றவாறு ரூ.50,000/- முதல் ரூ.70,000/- வரை பதவி உயர்வின் அடிப் படையில் மாத ஊதியமாக பெறலாம் என தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம் பகவத் தெரிவித்துள்ளார்.



# சனிப்பெயர்ச்சி மேஷம் முதல் மீனம் வரை 12 ராசிகளும் பெறப்போகும் பலன்கள்

சனிப்பெயர்ச்சி: 2026 வருடத்தில் மார்ச் மாதம் ஜோதிட ரீதியாக மிகவும் முக்கியமானது. ஜோதிடத்தில் கர்ம காரகன், நீதிமான் எனப்படும் சனிபகவான் இன்று பெயர்ச்சி ஆகிறார். வாக்கிய பஞ்சாங்கப்படி சனி பகவான் 6.3.26 (இன்று) கும்பம் ராசியில் இருந்து மீனம் ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார். சனி கொடுத்தால் எவர் தடுப்பார் என்று சொல்லுப்படுமளவுக்கு அவர் பவர்புல்லான கிரகம். சனிப்பெயர்ச்சி 12 ராசிகளுக்கும் என்ன மாதிரியான பலன்களை கொடுக்கும் என்பது குறித்து காணலாம்.

## மேஷம்

12 ஆம் இடத்திக்கு வருகிறார். 12 என்பது மறைவு ஸ்தானத்தில் விரய சனியாக பெயர்ச்சி ஆகியுள்ளார். எல்லாவற்றிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உடைமைகளை கவனமாக பாதுகாக்க வேண்டும். வீண் விரயம் அதிகரிக்கும். எனவே செலவில் கவனமாக இருக்க வேண்டும். ஆரோக்கியத்திலும் மிகவும் கவனமாக இருத்தல் அவசியம். உணவு கட்டுப்பாடு அவசியம் குழந்தைகள் விஷயத்தில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். கல்வியில் அதிக கவனம் வேண்டும். உத்யோகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். பணி மாறுதலுக்கு இது சரியான காலம் இல்லை. பயணங்கள் அதிகரிக்க கூடும். வாரம் ஒருமுறையாவது ஏதாவது ஒரு கோயிலுக்கு சென்று வழிபடுவது நற்பலன்களை கொடுக்கும்.

## ரிஷபம்

ரிஷபம் ராசிக்கு சனி பகவான் 11 ஆம் இடமான லாப ஸ்தானத்துக்கு பெயர்ச்சி ஆகிறார். இதனால் தொட்டது துலங்கும். உத்யோகத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு உண்டு. பணி இல்லாதவர்களுக்கு எதிர்பார்த்த நல்ல வேலை கிடைக்கும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். கடன் சுமை குறையும். பழைய பாக்கி வசூலாகும். கணவன் - மனைவி கருத்து வேறுபாடு நீங்கும். குழந்தை பாக்கி யம் கைக்கூடும். பெருமாள் வழிபாடு சிறப் பான பலன்களை தரும்.

## மிதுனம்

சனி பகவான் 9 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தில் இருந்து 10 ஆம் இடமான ஜீவன ஸ்தானத்திற்கு பெயர்ச்சி ஆகிறார். இதனால் மனதில் தன்னம்பிக்கை, தைரியம் அதிகரிக்கும். அற்புதமான மாற்றங்கள் நிகழும். நல்ல உத்யோகம் கிடைக்கும். தொழிலில் கடன் சுமை குறையும். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். திருமண தடை நீங்கி சுப காரியங்கள் நடக்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். ஆசைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும்.

## கடகம்

சனி பகவான் உங்களின் 9 ஆம் இடத்திற்கு பெயர்ச்சி ஆகிறார். இதனால் பிரச்சனைகளில் இருந்து விடுபடுவீர்கள். மனக்குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும். வாழ்க்கையில் வளர்ச்சி பாதைக்கு பயணம் செய்வீர்கள். கடன், நோய், தொழில், இல்வாழ்க்கை பிரச்சனை உள்ளிட்ட அனைத்தும் நீங்கும். தினசரி சூரிய பகவானை வழிபட்டு வந்தாலே பிரச்சனைகள் நீங்கி நற்பலன்கள் கிடைக்கும்.

## சிம்மம்

சனி பகவான் உங்கள் ராசிக்கு 8 ஆம் இடத்திற்கு பெயர்ச்சி ஆவதை அஸ்டம சனி என்பார்கள். குழந்தைகள் விஷயத்தில் கவனம் வேண்டும். கடன் கொடுக்கல் வாங்கலில் அதிக எச்சரிக்கை அவசியம். தெரியாத இடங்களுக்கு யாரையும் நம்பி செல்ல வேண்டாம். அதேநேரத்தில் சனி எதையும் எதிர்த்து நிற்பவர் என்பதால் மனவலிமை அதிகரிக்கும். நரசிம்மர் வழிபாடு நற்பலன்களை தரும்.

## கன்னி

சனி பகவான் ஏழாம் இடத்திற்கு பெயர்ச்சி ஆவது கண்டக சனி என்பார்கள். விரும்பியது நிறைவேறும். 5 மற்றும் 7 ஆகிய இடங்கள் இணைவதால் கல்வி, தொழில், வியாபாரம், இல்வாழ்க்கை எல்லாவற்றிலும் நற்பலன்கள் கிடைக்கும். யாரையும் எளிதில் நம்பிவிட வேண்டாம். மற்றவர்களால் பிரச்சனைகள் ஏற்படும் என்பதால் எதையும் சிந்தித்து செயல்பட வேண்டும். சனிக்கிழமை தோறும் பெருமாளை வழிபடுவது நற்பலன்களை கொடுக்கும்.

## துலாம்

துலாம் ராசிக்கு சனிப்பெயர்ச்சி எல்லாவிதமான நற்பலன்களை கொடுக்கும். மனதில் திட்டமிட்ட காரியங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நடக்கும். எதிரிகள் பலமிழப்பார்கள். வழக்குகளில் உங்களுக்கு சாதகமான தீர்ப்பு கிடைக்கும். ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். நிலம், வீடு, வண்டி வாகனம் உள்ளிட்ட அசையும் அசையா சொத்து சேர்க்கை உண்டு. கடன் தொல்லைகள் நீங்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். இல்வாழ்க்கையில் இனிமை கூடும். சிவபெருமான் வழிபாடு சிறப்பான பலன்களை பெறுவீர்கள்.

## விருச்சிகம்

சனி பகவான் உங்களுக்கு 5 ஆம் இடத்திற்கு பெயர்ச்சி ஆகிறார். இதனால் சாதகம், பாதகம் என 2 பலன்களும் கிடைக்கும். சுப காரிய தடைகள் விலகும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடைபெறும். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். பூர்விக சொத்தில் இருந்த பிரச்சனைகள் நீங்கும். கல்வியில் சிறப்பான முன்னேற்றம் காணப்படும். போட்டித் தேர்வில் வெற்றி கிடைக்கும். குல தெய்வ வழிபாடு முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

## தனுசு

சனி பகவான் உங்கள் ராசிக்கு 4 ஆம் இடத்திற்கு பெயர்ச்சி ஆவது நற்பலன்களையே தரும். பெரியோர் சொல் கேட்டு நடப்பது நன்மை கிடைக்கும். ஆரோக்கியம் மேம்படும். கடின உழைப்புக்கு கை மேல் பலன் கிடைக்கும். நிலம், வீடு, வண்டி வாகனம் சேர்க்கை உண்டாகும். எண்ணம்போல் வாழ்க்கை என்பதால உயர்வான எண்ணங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். இஷ்ட தெய் வழிபாடு நல்ல லாபத்தை கொடுக்கும்.

## மகரம்

சனி பகவான் உங்களுக்கு 3 ஆம் இடத்திற்கு பெயர்ச்சி ஆகிறார். ஏழரை சனி நிறைடைகிறது. சகோதரர்களுடன் இருந்த பிரச்சனை நீங்கும். பணியிட மாறுதல் கிடைக்கும். முயற்சிகள் ஒவ்வொன்றும் மிகப்பெரிய முன்னேற்றத்தை கொடுக்கும். தொட்டதெல்லாம் பொன்னாக மாறும். போட்டித் தேர்வில் வெற்றி கிடைக்கும். அசையும், அசையா சொத்துகள் சேர்க்கை இருக்கும். திட்டமிட்டு செய்தால் கொடி கட்டி பறக்கலாம். குரு பகவான் வழிபாடு நற்பலன்களை தரும்.

## கும்பம்

சனி பகவான் உங்களின் 2 ஆம் இடத்திற்கு பெயர்ச்சி ஆகிறார். பாத சனி தொடங்குகிறது. மனக் குழப்பம் நீங்கும். கஷ்டங்கள் படிப்படியாக குறையும். ஆரோக்கியத்தில் கவனம் வேண்டும். கடன் கொடுக்கல் வாங்கலில் அதிக எச்சரிக்கை வேண்டும். பூர்விக சொத்துகள் கைக்கூடி வரும். பிரிந்த உறவுகள் ஒன்றிணைவார்கள். கணவன் - மனைவி உறவில் அந்யோநியம் அதிகரிக்கும். முருகன் வழிபாடு முன்னேற்றத்தை கொடுக்கும்.

## மீனம்

சனி பகவான் உங்கள் ராசிக்குள் பயணமாகிறார். ஜென்ம சனி தொடங்குகிறது. அதைப் பார்த்து பயம் வேண்டாம். திட்டமிட்டு செய்தால் எல்லாவற்றிலும் வெற்றி கிடைக்கும். புதிய முயற்சிகள் மேற்கோள்ள வேண்டாம். முதலீடுகளில் அதீத எச்சரிக்கை வேண்டும். உத்யோகத்தில் தேவையில்லாத பிரச்சனைகளில் சிக்கிக் கொள்ள வேண்டாம். ஆஞ்சிநேயர் வழிபாடு அற்புதமான மாற்றங்களை கொடுக்கும்.



## பெரம்பலூர் மாவட்டத்திற்கான விஷன் 2030 மற்றும்

# ஐந்தாண்டு சாதனை திட்டங்கள் குறித்த கையேட்டினை வெளியீடு

பெரம்பலூர், மார்ச் 7: தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை வர்த்தக மையத்தில், நேற்று "உங்கள் கனவ சொல் லுங்க" திட்டத்தின் நிறைவாக "கனவுகள் மெய்ப்படும்" என்ற தலைப்பில் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இந்த நிகழ்ச்சியினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி தலைமையில், காணொளிக் காட்சி வாயிலாக நேரலையில் பார்வையிட்டு, பெரம்பலூர் மாவட்டத்திற்கான விஷன் 2030 மற்றும் ஐந்தாண்டு சாதனை திட்டங்கள் குறித்த கையேட்டினை வெளியிட்டார்.



இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற ஐந்தாண்டுகளில் மாநிலத்தின் வளர்ச்சிக்கும், ஒவ்வொரு தனி மனிதரின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. குறிப்பாக மகளிர் முன்னேற்றத்திற்கு மாதம் ரூ. 1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, சாதாரண கட்டண அரசு நகரப் பேருந்துகளில் அனைத்து மகளிருக்கும் கட்டணமில்லா இலவச பேருந்து பயணத் திட்டம், பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையிலும், கல்லூரி பயிலும்போதே அவர்களுக்கான பயிற்சிகளும் வழிகாட்டுதல்களும் வழங்கும் வகையில் நான் முதல்வன் திட்டம் என எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றது. அதே போல கல்லூரி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டம், அரசு மற்றும் தனியார் கல்லூரியில் இறுதி யாண்டு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் உலகம் உங்கள் கையில் என்னும் மாபெரும் திட்டம், மற்றும் மூலம் பெற்றோர்களை இழந்த ஆதரவற்ற குழந்தைகளுக்கு மாதம் ரூ.2,000 வழங்கும் அன்புக்கரங்கள் திட்டம், பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கு மாதம், மாதம் வீட்டிற்கே ரேஷன் பொருள் வழங்கும் தாயுமானவன் திட்டம் என திராவிட மாடல் ஆட்சியில் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் திட்டங்களை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

பொதுமக்களின் குறைகளை அரசுத்துறை அலுவலர்கள் நேரில் சென்று கேட்டறிய உங்களுடன் ஸ்டாலின் என்ற சிறப்புமிக்க திட்டத்தினை செயல்படுத்தி அந்தத் திட்டத்தின் மூலம் நடத்தப்பட்ட முகாம்களில் பொதுமக்களின் தனிப்பட்ட கோரிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, மனுக்களுக்கு விரைந்து தீர்வு காணும் திட்டங்கள் என மக்களின் தேவைகளை அறிந்து, உணர்ந்து ஒவ்வொன்றையும் பூர்த்தி செய்திடும் வகையில் ஒவ்வொரு திட்டமும் செயல்படுத்தப்படுகின்றது.

இத்தனை திட்டங்களையும் செயல்படுத்திய பிறகும் நம் மக்களின் கனவுகளை நிறைவேற்ற வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் உங்க கனவ சொல்லுங்க என ஒவ்வொரு வீட்டிலும் உள்ளவர்களிடம் கேட்கப்பட்டு, அதன் தகவல்களை முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது. அதே போல என்ஊர் என் கனவு என்ற திட்டம் மூலம் நம் ஊரை, மாவட்டத்தைச் மேலும் வளர்ச்சியடைச் செய்ய 2030க்குள் என்னென்ன திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என விவசாயிகள், வர்த்தக சங்கத்தினர், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், தொழில் முனைவோர் என அனைத்து தரப்பினரிடமும் கருத்துக்களை கேட்டறிந்து அதன் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இன்று அந்த நிகழ்வின் நிறைவாக "கனவுகள் மெய்ப்படும்" என்ற நிகழ்வு நடத்தப்பட்டு, தங்கள் துறைசார்ந்து செய்யப்பட்ட சாதனைகள் குறித்து அந்தந்த துறையின் அமைச்சர் பெருமக்களே மக்களிடம் எடுத்துக்கூறிய நிகழ்வு சென்னையில் நடைபெற்றது. உங்கள் ஒவ்வொருவரின் கனவையும் மெய்ப்படச்செய்ய முதலமைச்சர் தலைமையில் அமையப் போகும் திராவிடமாடல் 2.0 ஆட்சியில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அதற்காக முதலமைச்சர் அனைவரும் ஆதரவாக இருக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தேவநாதன், அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், நகர் மன்றத் தலைவர் அம்பிகா ராஜேந்திரன், சமூகப்பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் சிவக்கொழுந்து, நகர் மன்ற துணைத் தலைவர் ஆதவன் பேரூராட்சி மன்ற தலைவர்கள் வள்ளியம்மை (அரும்பாவூர்), சங்கீதா ரமேஷ் (குரும்பலூர்),ஜகீர் உசேன் (லெப்பைக்குடிக்காடு), பாக்கிய லட்சுமி (பூலாம்பாடி),முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் துரைசாமி, ராஜ்குமார். முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர், டி.சி.பாஸ்கர், கருணாநிதி மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.






## சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடத்தப்பட்ட மகளிர் தின விழா

# மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி பங்கேற்பு

பெரம்பலூர், மார்ச் 7: மார்ச் - 8 உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கினார்.

இவ்விழாவில் அலுவலர்கள் பலரும் தங்களின் தனித் திறவுகளை வெளிக்காட்டும் வகையில் பெண்களை பற்றிய சிறப்பு கவிதைகள், பேச்சுக்களை வழங்கினர். பல்வேறு கலை நிகழ்ச்சிகள், பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததாவது- உலக மகளிர் தினம், பெண்களின் சம உரிமை, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில், ஆண்டுதோறும் மார்ச் 8 அன்று கொண்டாடப்படுகிறது. பெண்களின் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் சாதனைகளை அங்கீகரிக்கவும், பாலின சமத்துவத்தை வலியுறுத்தவும். அவர்களின் உரிமைகளுக்காகப் போரா டிய வரலாற்றை நினைவு கூறும் வகையில் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. 1917 இல் ரஷ்யப் பெண்கள் நடத்திய போராட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, இந்தத் தேதி உலகளவில் அங்கீகரிக்கப்பட்டது. பெண்களின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு முதலமைச்சர் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் பெண் கல்வி, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தி வருகிறார்.

குறிப்பாக மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிர்களுக்கு கட்டணமில்லா இலவச பேருந்து பயணத் திட்டம், பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம் போன்ற பெண்களுக்கான முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். இந்த வகையில் பெண்கள் தங்களுடைய முன்னேற்றத்தை கருத்தில்கொண்டு சமு தாயத்தில் சரித்திரம் படைக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன், சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் சிவக்கொழுந்து, மாவட்ட சமூக நல அலுவலர் புவனேஸ்வரி, மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் ஜெயஸ்ரீ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொ) சொர்ண ராஜ், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்.சுவாமி முத்தழகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





## ரூ.31.75 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள

# மாற்றுத் திறனாளிகளுக்கான விழுதுகள் சேவை மையத்தினை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்

பெரம்பலூர், மார்ச் 7: பெரம்பலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் மூலம் ரூ.31.75 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த விழுதுகள் சேவை மையத்தினை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலையில் நேற்று திறந்து வைத்தார்.




மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் உலக வங்கி இணைந்து மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிவதற்காக தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தை நடத்துகிறது. பெரம்பலூர் மாவட்டம் இரண்டாம் நிலையில் ஆரம்பித்து, மாவட்டத்தில் ஒரு வருவாய் உட்கோட்ட அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையம் மற்றும் வட்டார அளவில் நான்கு வட்டாரத்திலும் ஒரு ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையமும் செயல்பட உள்ளது. அந்த வகையில், இன்றைய தினம் பெரம்பலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் ரூ.31.75 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள வருவாய் உட்கோட்ட அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையமான விழுதுகள் மையத்தை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையில் திறந்து வைத்தார்கள்.

இந்த, மாற்றுத்திறனாளிகளுக்கான விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை மையத்தில் இயன்முறை சிகிச்சை மற்றும் ஆக்குபேசனல் தெரப்பி, சிறப்பு கல்வி மற்றும் கண்பார்வை குறைபாடு உள்ளவர்களுக்கான பயிற்சிகள் மற்றும் செவித்திறன் உள்ளவர்களுக்கான பயிற்சிகள் மற்றும் உளவியல் ஆலோசனை ஆகியவை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

மேலும், வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையம் பெரம்பலூர் ஒன்றியத்தில் கோனேரிப்பாளையம் விபிஆர்சி கட்டிடத்திலும் வேப்பந்தட்டை ஒன்றியத்தில் அரசு மருத்துவமனை கிருஷ்ணாபுரத்திலும், ஆலத்தூர் ஒன்றியத்தில் பழைய ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும், வேப்பூர் ஒன்றியத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும் விழுதுகள் ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையம் செயல்படவுள்ளது என்பது குறிப்பிடதக்கது.

தொடர்ந்து, போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் துறையூர் சாலை (தனலட்சுமி சீனிவாசன் கலை அறிவியல் கல்லூரி) பகுதியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் ரூ. 40 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள உயர் மின் கோபுர விளக்குகளை திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன், அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், நகர்மன்ற தலைவர் அம்பிகா ராஜேந்திரன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சீனிவாசன், நகராட்சி உதவி செயற்பொறியாளர் ரவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சட்டம் ஒழுங்கில் முதல்வர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்: திருமாவளவன்

சென்னை, மார்ச் 7: சட்டம் ஒழுங்கில் முதல்வர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என திருமாவளவன் பேசியுள்ளார். நாங்குநேரியில் நடந்த படுகொலை சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்த திருமாவளவன், சட்டம் ஒழுங்கில் முதல்வர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தினார். சமூக விரோத கும்பல்களை கைது செய்ய வேண்டும், மது கடைகளை அகற்ற வேண்டும், காவல் நிலையம் திறக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாங்குநேரியில் நடைபெற்ற படுகொலை சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரை நேரில் சென்று சந்தித்து ஆதரவு தெரிவித்தார் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், சம்பவத்தில் உயிரிழந்த குடும்பத்தினரை பார்த்து ஆறுதல் தெரிவித்தோம். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாக நிதி உதவியும் அளித்தோம். வட இந்திய இளைஞரின் குடும்பத்திற்கும் நிதி உதவி அளித்துள்ளோம். காயம் அடைந்தவர்களுக்கும் கட்சியின் சார்பாக நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் சில சமூக விரோத கும்பல் ஈடுபட்டுள்ளனர், சில இளைஞர்களை கைது செய்திருக்கிறார்கள். அவர்களை தூண்டியவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

ஒரு கிலோ மீட்டர் பரப்பளவில் 3 மது கடைகள் உள்ளன, அவைகள் அனைத்தையும் அப்புறப்படுத்த வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் கோரிக்கை. அது மட்டுமின்றி ரேஷன் கடை தனியாக தங்களுக்கு வேண்டும் நாடார் சமூகத்து மக்களும் கோரிக்கை எழுப்பி உள்ளார்கள்.

அந்த பகுதியில் உடனடியாக ஒரு காவல் நிலையம் திறக்க வேண்டும் 40, 50 ஆண்டுகளுக்கு மேல் இந்த பிரச்சனை இருக்கிறது எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்கள். முதல்வர் இந்த பிரச்சனையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டும் இன்றி சிவகங்கையில் இதுபோன்று கிராமத்திற்குள் புகுந்து கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது. இதை கண்டும் காணாமல் காவல்துறையினர் மெத்தனமாக செயல்பட்டு வருவது தான் காரணம்.

தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வெளிப்படையாக பெண்கள் தங்களின் ஆதங்கத்தை தெரிவித்தார்கள். ஆகவே மாண்புமிகு முதல்வர் சட்டம் ஒழுங்கில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என விடுதலைகள் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பாக வலியுறுத்துகிறோம்" என கூறினார்.

# தவெக உடன் கூட்டணியா? நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்திய பாமக ராமதாஸ்!

சென்னை, மார்ச் 7: பாமக நிறுவனர் ராமதாஸ் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், தவெக-வுடன் கூட்டணி அமைப்பது குறித்து முக்கிய நிர்வாகிகள் விவாதித்தனர். திமுக, அதிமுக கூட்டணியில் இணைய முடியாத சூழலில், பாமக 35 பகுதிகளில் போட்டியிடத் திட்டமிட் டுள்ளது. எதிர்வரும் தேர்தலில் பாமக யாருடன் கூட்டணி அமைக்கப்போகிறது என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்த தைலாபுரம் இல்லத்தில் பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் தலைமையில் முக்கிய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தில் பாமக கௌரவத் தலைவர் ஜிகே.மணி. செயல் தலைவர் ஸ்ரீகாந்தி. பொதுச் செயலாளர் முரளி சங்கர். பொருளாளர் செய்யத் மன்சூர்உசேன். இணைப்பொதுச் செயலாளரும், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினருமான அருள். தலைமை நிலைய செயலாளர் அன்பழகன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திமுக மற்றும் அதிமுக கூட்டணியில் இணைய முடியாத சூழலில் மருத்துவர் ராமதாஸ் தலைமையிலான பாமக, தவெக-வுடன் கூட்டணி அமைப்பது தொடர்பாக இந்த ஆலோசனைகூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

தவெக-வுடன் கூட்டணி ஏற்படும் சூழலில் பாமக போட்டியிடவுள்ள 35 பகுதிகளில் உள்ள முக்கிய பொறுப்பாளர்கள் அழைக்கப்பட்டு ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் சட்டமன்ற தேர்தலில் ஏறத்தாழ அனைத்து கட்சிகளும் கூட்டணியை இறுதிசெய்துள்ள நிலையில் மருத்துவர் ராமதாஸ் தலைமையிலான பாமக யாருடன் கூட்டணி என்பது இன்னும் முடிவுசெய்யப்படாமல் உள்ளது.








### தூத்துக்குடி மேற்கு மாவட்டம் சமூக ஆர்வலர் அன்னை வி.ஜி.சரவணன் தலைமையில்

# தமிழக வெற்றிக் கழகத்தின் ஆலோசனைக் கூட்டம்

தூத்துக்குடி, மார்ச் 7: தமிழக வெற்றிக் கழகத் தலைவர் தளபதிவிஜயின் ஆணையின்படியும். கழக பொதுச்செயலாளர் புஸ்ஸி என்.ஆனந்த் வழிகாட்டுதலின்படியும் தமிழக வெற்றிக் கழகம் தூத்துக்குடி மேற்கு மாவட்டம் ஜனநாயகனின் தீவிர ரசிகன் சமூக ஆர்வலர் அன்னை VG. சரவணன் தலைமையில் மாவட்ட மகளிர் அணி செயலாளர் ஜெயசித்ரா முன்னிலையில், சிறப்பு ஏற்பாட்டாளர் மாவட்டத் துணைச் செயலாளர் மணி லட்சுமி மார்ச் 8 மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகம் தூத்துக்குடி மேற்கு மாவட்டம் அலுவலகத்தில் நேற்று காலை 11.00 மணி அளவில் ஆலோசனைக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.



வி.ஜி.சரவணன்

இந்நிகழ்ச்சிக்கு ஸ்ரீவை மேற்கு ஒன்றிய செயலாளர் பாலமுருகன், ஸ்ரீவை வடக்கு ஒன்றிய செயலாளர் பொன்ராஜ், ஸ்ரீவை மேற்கு ஒன்றிய துணை செயலாளர் சரஸ்வதி, ஸ்ரீவை மேற்கு ஒன்றிய மகளிர் அணி செயலாளர் சுப்புலட்சுமி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாத்திமா பார்வின், ஸ்ரீவை வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் வள்ளி ராணி, பெருங்குளம் பேரூராட்சி மகளிர் அணி செயலாளர் மேரி, சாந்தி, பாலகஸ்தூரி, பாலசுமதி, முருகேஸ்வரி, சாந்தி மற்றும் மேஷாக் மேலும் பலர் கலந்து கொண்டனர்.

பழைய டிரஸ்ட்
(Trust)
தேவைப்படுவோர்
தொடர்புக்கு:
99 44 616 559




Owned, Printer and Published by **G.SASIREKA** from No: 64/80, Vivehananda Colony, Vadapalani, Chennai - 26, Printing at Annai Abirami Achagam, No: 24, Venguchetty Street, Poonga Nagar, Chennai - 3. Editor: **V.S.N.SHARMA.**